## தலைப்பு 290 – கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 மே 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 செப்தெம்பர் 17 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம், நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்

தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தது என்றும்.

(ஆ) இந்த அறிக்கையின் 1.6.2(அ), (ஆ) மற்றும் 1.6.3.(அ) பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புக்கள் தொடர்பில் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.6.1 நிதி செயலாற்றல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கடற்றொழில் வருமானப் பதிவேட்டை கூட்டுகையில் மொத்த வருமானத்தின் கூட்டுத் தொகை ரூபா **58,717,336** எனக் கணக்கிடப்பட்டிருந்த போதிலும், மாதாந்த பொழிப்புக் களில் அந்த கூட்டுத்தொகை ரூபா **58,897,336** எனக் காணப்பட்டமையால் ரூபா **180,000** வேறுபாடொன்று காணப்பட்டது. | நேரொத்த பதிவேடு களை திணைக்களப் புத்தகங்களுடன் ஒப்பீடு செய்து வேறுபாட்டிற் கான காரணத்தைக் கண்டறிந்து சரியாக வருமானத்தை கணக்கீடு செய்தல் வேண்டும். | இவ்வாறான குறைபாடு களை தவிர்த்துக் கொண்டு சரியான வித த்தில் திணைக்கள வரு மானப் பதிவேடுகளை பேணிச்செல்வதற்கு உத் தியோகத்தர்களிற்கு அறி வுறுத்தல் வழங்கப்பட் டுள்ளது. |
| (ஆ) | மீளாய்வாண்டின் மாதாந்த கணக்குப் பொழிப்புகளின் படி, திணைக்கள வருமானங்களற்ற ஏனைய பெறுவனவுகளின் மொத்தம் ரூபா **30,516,619** ஆன போதிலும், நிதிச் செயலாற்றல் கூற்றில் அத் தொகை ரூபா **29,287,323** என ரூபா **1,229,296** குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | வருமானங்களை சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். | குறைபாடுகளை தவிர் த்துக் கொண்டு சரியான விதத்தில் வருமானப் பதிவேடுகளை பேணிச் செல்வதற்கு உத்தியோக த்தர்களிற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. |

#### 1.6.2 நிதி நிலைமைக் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக் கூற்றுக்களின் படி **2019** திசெம்பர் 31 இல் உள்ள வாறான ஆதனம், | முன்னைய ஆண்டு முதல் காணப்பட்டு வருகின்ற இந்த | திறைசேரி கணக்குகளில் காட்ட ப்பட்டுள்ள பெறுமதிகள் சரியான தாகும். **ACA 6** அறிக்கையில் |

| | | | |
|---|---|---|---|
| | பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா **742,365,856** ஆன போதிலும், திறைசேரிப் புத்தகத்தின் படி அப்பெறுமதி ரூபா **620,871,012** ஆகக் காணப்பட்டமையால் ரூபா **121,494,844** கணக்கிணங் காமை காணப்பட்டது. | வேறுபாட்டிற்கான காரணங்களைக் கண்டறிந்து சரியா கக் கணக்கீடு செய் யப்படுதல் வேண் டும். | காட்டப்பட்டுள்ள சில காணிகள் மற்றும் வாகனங்களின் பெறும திகள் முன்னைய ஆண்டுகளி லிருந்து முன்கொண்டு வரப்பட்ட பெறுமதிகளாகும். மதிப்பீட்டுப் பெறுமதிகள் உள்ளடக்கப்பட்டு திணைக்களப் பதிவேடுகளை சீராக்குதல் தற்போது இடம் பெற்று வருகின்றது. |
| (ஆ) | **2019** திசெம்பர் 31 இல் உள்ளவாறு அருவச் சொத்து க்களின் பெறுமதி ரூபா **17,357,532** எனக் காண்பிக்க ப்பட்டிருந்த போதிலும், திறை சேரிப் புத்தகங்களின் படி அப்பெறுமதி ரூபா **3,825,523** எனக் காணப்பட்டமையால் ரூபா **13,532,008** வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | முன்னைய ஆண்டு முதல் காணப்பட்டு வருகின்ற இந்த வேறுபாட்டிற்கான காரணங்களைக் கண்டறிந்து சீராக் குதல் வேண்டும். | சமர்ப்பிக்கப்பட்டுள்ள கணக்கா ய்வு அவதானிப்பிலுள்ள ரூபா **13,532,009** வேறுபாட்டில் ரூபா **9,842,805.00** இற்கான சொத்து க்கள் தற்போது திறைசேரிப் புத்தகங்களில் உள்ளடக்கப்பட் டுள்ளன. எஞ்சிய வேறுபாடான ரூபா **3,689,204.00** பெறுமதி ஆரம்ப மீதிகளை கணக்கீடு செய்கையில் ஏற்பட்டுள்ள வேறு பாடாக காணப்படுவதுடன் எதிர் காலத்தில் இதனைச் சீராக் குவதற்கு நடவடிக்கை எடுக்க ப்படும். |

### 1.6.3 பதிவேடுகள் மற்றும் புத்தகங்களை பேணுதல்

**திணைக்களத்தினால் பின்வரும் பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் இன்னும் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்டது.**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | **சேதங்கள் பதிவேடு** | | |
| | நிதிப் பிரமாணம் 110 இன் பிரகாரம் சேதங்கள் பற்றிய பதிவேடு நாளதுவரையாக் கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 110 இலுள்ள ஏற்பாடுகளின் படி அதன் கீழுள்ள படிவத்தின் படி சேதங்கள் பற்றிய பதிவேடு நாளதுவரையாக பேணப்படுதல் வேண்டும். | பதிலளிக்கப்பட்டிருக்கவி ல்லை |
| (ஆ) | **கொள்வனவுச் சபையினதும் தொழில்நுட்ப மதிப்பீட்டுச் சபையினதும் வருகைப் பதிவேடு** | | |
| | அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கையேட்டின் 2.11.2 வழிகாட்டலின் படி சபையின் செயலாளரினால் வருகைப் பதிவேடு பேணப்ப ட்டிருக்கவில்லை. | வழிகாட்டலின் படி சபையின் செயலாளரினால் வருகைப் பதி வேடு பேணப்படுதல் வேண்டும். | பதிலளிக்கப்பட்டிருக்கவி ல்லை |

### 1.6.4 கணக்காய்விற்கான சான்றின்மை

பின்வரும் கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்புடைய கணக்காய்வுச் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆம் ஆண்டிற்கான கடல் அட்டைகள் ஏற்றுமதி அனுமதிப்பத்திர வருமானமாக நிதிப் பரிவிற்கு கிடைத்திருந்த மொத்தத் தொகை ரூபா 4,595,850 எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அனுமதிப்ப த்திர வருமானம் ரூபா 4,365,850 எனக் குறிப்பிடப்பட்டிருந்தமையால் ரூபா 230,000 வேறுபாடு அவதானிக்கப்பட்டதுடன், அதற் கான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக் கவில்லை. | வருமான அறிக்கைகளை சரியாக பேணி வருதல் வேண்டும் | கணக்குகள் பிரிவின் உள்ளபடியான வருமானம் சரியானதாகும். முகாமைத் துவ பிரிவு திருத்தமாக பதிவேடுகளை பேணியிருக் காமையே இந்த வேறுபாட் டிற்கான காரணமாகும். |
| (ஆ) | “சுவஸ்தனா: சான்றிதழ் வருமானமாக திணைக்களத்திற்குக் கிடைத்திருந்த தொகை ரூபா 10,128,200 ஆன போதிலும், தரப்படு த்தல் பிரிவின் மூலம் வழங்கப்பட்டிருந்த அனுமதிப்பத்திரங்களின் பெறுமதி ரூபா 10,409,400 எனக் குறிப்பிடப்பட்டிருந்தமை யால் ரூபா 281,200 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டதுடன் அதற்கான சான்று கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | வருமான மூலங் களை சேகரிக் கும் பிரிவுகளால் வருமான அறிக் கைகளை சரியா க பேணி வருதல் வேண்டும். | 2018 ஆம் ஆண்டில் அறவிடப்பட்டுள்ள அனும திப்பத்திரங்கள் 2019 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டு ள்ளமையால் இந்த வேறுபாடு ஏற்பாட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை வருமானக் கூற்றில் **2017,2018** மற்றும் **2019** ஆம் ஆண்டுகளிற்கான நிலுவை வருமானம் முறையே ரூபா **100,000**, ரூபா **60,000** மற்றும் ரூபா **80,000** என கூட்டுமொத்தம் ரூபா **240,000** ஆகக் காட்டப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிலுவை வருமானத்தில் ரூபா **5,000** மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. | நிலுவை வருமான ங்கள் துரிதமாக அறிவடப்படுதல் வேண்டும். | இணங்குகின்றேன். படகுகள் உரிய திகதிகளில் பதிவுக்காக சமர்ப்பிக்கப்ப டாதுள்ளமை இதற்கான காரணமாகும். இந்த படகுகளின் உரிமையாளர்களை மீண்டும் அறிவுறுத்தி பதிவினை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்காது ள்ள படகுகளை தவறியோர் பட்டியலில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2.2 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 25 சதவீதம் முதல் 100 சதவீதம் வரை சேமிப்புக்கள் காணப்பட்ட 9 செலவின விடயங்களிற்கான தேறிய நிதி ஏற்பாடு ரூபா **442,585,000** ஆகவும் மொத்தச் செலவினம் ரூபா **71,570,473** ஆகவும் காணப்பட்டதுடன் அதற்கமைய சேமிப்பு ரூபா **371,014,527** ஆகும். இச்சேமிப்பு நிதி ஏற்பாட்டில் 84 சதவீதமாகக் காணப்பட்டது. பதிலளித்தல் கடிதத்தின் படி, திணைக்களத்தின் ஒட்டுமொத்த சேமிப்பு 72 சதவீதம் என்பதாக குறிப்பி டப்பட்டுள்ள போதிலும், கணக்காய் வால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள தகவல் களின் படி 9 செலவின விடயங்க ளிற்குரிய சேமிப்பு 84 சதவீதமாகும். | ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டை பயன்படு த்துவதற்காக அபிவி ருத்திச் செயற்திட்டங் களை துரிதப்படுத்து தல் வேண்டும். | திணைக்களத்தின் தேறிய நிதி ஏற்பாடுகளிற்கும் உள்ளபடி யான செலவினத்திற்கும் இடையிலான சேமிப்பின் சத வீதம் 72 ஆகும். |
| (ஆ) | 100 சதவீத நிதி ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்த **290 – 1 – 1 – 10 – 2202** ஆம் இலக்க செலவின விடயத்திற்கான பாதீட்டு பிரேரணையின் கீழ் 2019 யூன் மாதம் ரூபா 300 மில்லியன் குறைநிரப்பு மதிப்பீடு வழங்கப்பட்டிருந்ததுடன் அதன்மூலம் பல்நோக்கு படகுகளிற்கான களஞ்சிய வசதிகள் மற்றும் பாதுகாப்பு நியமங்களை மேம்படுத்துவதற்காக 50 சதவீத மானியமொன்றை வழங்குவத ற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. இருப்பி னும், அச்செயற்திட்டம் ஆரம்பிக்கப் படாதிருந்துதடன், அதற்கான காரண ங்களும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவ தற்காக பெற்றுக் கொண்ட குறைநிரப்பு நிதி ஏற்பாட்டிலிருந்து குறித்த செயற்திட்டம் துரிதமாக நடைமுறை ப்படுத்தப்படுதல் வேண்டும். | 2019 இன் பாதீட்டு பிரேரணைகளின் கீழ் இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளதுடன் இந்த நிதி ஏற்பாடு 2019 யூன் மாதமே மேற்கொள்ளப்பட்டிருந் தது. இச்செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்காக அமைச்ச ரவை விஞ்ஞாபனமொன்றை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்த போதிலும், பாராளுமன்றம் கலைக்கப்பட் டமையால் சமர்ப்பிப்பதற்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. அதன்பின்னர், இச்செயற்திட்ட த்தை நடைமுறைப்படுத்து வதற்கு போதிய காலம் காணப்படாமையால் செயற் பாடுகளை மேற்கொள்ள முடிந்திருக்கவில்லை. |

## 2.3 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளை பயன்படுத்துதல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் களப்பு அபிவிருத்தி செயற்திட்டங்களின் கீழ் மீன் உற்பத்தி இயலளவை அதிகரிப்பதற்காக களப்புகளிற்கு இறால் குஞ்சுகளை விடுவிக்கும் செயற்திட்டத்தின் கீழ் யாழ்ப்பாண களப்பில் 21,470,000 இறால் குஞ்சுகளை விடுவிப்பதற்காக திணைக் களத்தினால் ரூபா 17,176,000 தொகை தனியார் நிறுவனமொன்றுக்குச் செலுத்தப் பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) யாழ் மாவட்ட கடற்றொழில் அலுவலகத்திற்குச் சொந்தமான 13 இறங்கு துறைகளில் இறால் குஞ்கள் விடுவிக்கப்பட வேண்டிய இடங்கள் தொடர்பில் திட்ட மொன்று காணப்படாததுடன் 4 இடங்களிற்காக 3 முதல் 4 நாட்களிற்கு இடைப்பட்ட கால இடைவெளியல் ஒத்த அளவில் இரண்டு தடவைகள் விடுவிக்கப் பட்டிருந்தமை அவதானிக்கப்பட் டது. யாழ்ப்பாண களப்புக்கு விடுவிக்க ப்பட்ட **21,470,000** இறால் குஞ்சுகளின் எண்ணிக் கையில் 35 சதவீதமான **7,445,000** இறால் குஞ்சுகள் சுழிபுரம் என்ற இடத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்கான விசேட காரண மெதுவும் அவதானிக்கப்பட வில்லை. அவ்வாறே கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் அலுவலக த்திற்கு உரித்துடையதாக 6 இடங்கள் காணப்பட்ட போதிலும், திட்ட மொன்று இன்மை காரணமாக அந்த இடங்களிற்கு இறால் குஞ்சுகள் விடுவிக்கப் பட்டிருக்கவில்லை. பதிலளித்தல் கடிதத்தின் படி மாவட்ட உதவிப் பணிப்பாளர் மற்றும் சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினர்களுடன் கலந்துரையாடி முறையான திட்டமொன்றுடன் அது மேற்கொ | திட்டமொன்றின் கீழ் தேவையான இடங்க ளிற்கு மாத்திரம் இறால் குஞ்சுகள் விடுவிக்கப்படுதல் வேண்டும். | இறால் குஞ்சுகளை விடு விக்கையில் கருத்திற் கொள்ள வேண்டிய பல விடயங்கள் இருப்பதுடன், இது தொடர்பில் மாவட்ட உதவிப் பணிப்பாளர் மற்றும் சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினர்க ளுடன் கலந்துரையாடி முறையான திட்டமொன்று தயாரிக்கப்பட்டு இது மேற்கொள்ளப்பட்டது. கடற்றொழில் பரிசோதகர் பிரிவிற்கு அண்மித்துக் காணப்படுகின்ற மற்றும் இலகுவில் சென்றடைய க்கூடிய இறங்கு துறைக ளிற்கு இரு தடவைகள் இறால் குஞ்சுகள் விடுவி க்கப்பட்டன. இறங்கு துறைகள் முறையான நுழைவுகளைக் கொண்ட தாக் காணப்பட்டமையால் அந்த இறங்கு துறைக ளிற்கு இறால் குஞ்சுகள் போக்குவரத்துச் செய்ய ப்பட்டன. சுழிபுரம் கடற் றொழில் பரிசோதகர் அலுவலகத்தின் கீழுள்ள 9 இறங்குதுறைகள் நேர டியாக களப்புடன் சம்பந் தப்பட்டிருப்பதனால் விடு விக்கப்பட்டிருந்த இறால் |

| | | | |
|---|---|---|---|
| | ள்ளப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், குறித்த திட்டத்தின் பிரதியொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | குஞ்சகளில் 35 சதவீதமானவை சுழிபுரம் கடற்றொழில் பரிசோதகர் பிரிவிற்கு விடுவிக்கப்பட்டது. கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள இறங்குதுறைகளிற்கும் இறால் குஞ்சுகளை விடுவிக்கும் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. |
| (ii) | இறால் குஞ்சுகளை விடுவிப்பதற்கு முன்னரும் விடுவிக்கப்பட்டு 4 இற்கும் 5 இற்கும் இடைப்பட்ட காலத்தின் பின்னர், இறால் உற்பத்தி அளவை ஒப்பீடு செய்தல் வேண்டும். இருப்பினும் யாழ்ப்பாண களப்பின் கொட்டடி, நாவான்துறை, அரியாலை கிழக்கு மற்றும் தம்பட்டி ஆகிய இடங்களில் **1,275,000** இறால் குஞ்சுகள் வீதம் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும், செலவிடப்பட்டிருந்த ரூபா **4,080,000** தொகையுடன் ஒப்பிடுகையில் இறால் உற்பத்தியில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதா என்பது தொடர்பில் பின்தொடர் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | செலவிடப்பட்டிருந்த தொகையுடன் ஒப்பிடுகையில் இறால் உற்பத்தியில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதா என்பது தொடர்பில் பின்தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். | களப்புகளிலும் அவ்வாறே கடலிலும் இறால்கள் பிடிக்கப்படுவதனால், களப்புத் துறைமுகங்களை மையமாகக் கொண்டு உற்பத்தி மீதான தரவுகளைச் சேகரித்தல் போதாதென்பதுடன், கடலிலும் மீனவர்களால் இறால்கள் பிடிக்கப்படுவதனால் அந்தத் தரவுகளையும் பெறுதல் வேண்டும். |
| (iii) | **2018** நவம்பர் **24** அன்று புத்தளம் மாவட்ட கடற்றொழில் அலுவலகத்திற்குச் சொந்தமான முந்தல் ஏரியில் ரூபா 1,040,000 பெறுமதியான **1.3** மில்லியன் இறால் குஞ்சுகள் வைப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும், **2019** ஆம் ஆண்டிற்கான இறால் விளைச்சல் குறித்த மாதாந்த அறிக்கைகள் எதுவும் திணைக்களத்தால் பெற்றுக் கொள்ளப்படாமையால் அதன் செயலாற்றலை அளவிட முடிந்திருக்கவில்லை. பதிலளித்தல் கடிதத்தின் படி, மாதாந்த அறிக்கைகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அந்த அறிக்கைகள் **2018** ஆம் ஆண்டிற்கானவையாகும். | காலப்பகுதிக்குரிய இறால் விளைச்சல் குறித்த அறிக்கைகளை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | முந்தல் ஏரியின் இறால் விளைச்சல் தொடர்பான மாதாந்த அறிக்கைகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. |

**(ஆ)** நீர்கொழும்பு, புத்தளம் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட கடற்றொழில் அலவலகங்களின் 186 பயனாளிகளிற்காக 1116 கடலட்டை பிடித்தல் கூண்டில்களை தயாரிப்பதற்குத் தேவையான பொருட் களை வழங்குவதற்கும், தேசிய நீரியல்வள அபிவிருத்தி அதிகாரசபையின் மூலம் **186,000** கடலட்டை குஞ்சுகளை கொள்வனவு செய்து வழங்குவதற்கும் திட்டமிடப்பட்டிருந்தது. 2018 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் கடலட்டை கூண்டில்களை தயாரிப்பதற்குத் தேவை யான பொருட்களை வழங்குதல் முடிவடையாதிரந்ததுடன் 2019 ஆம் ஆண்டில் அதற்காக ரூபா **24,986,514** தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| (i) | மூன்று விடயங்களிற்காக செலுத் திய விலைகளையும் மதிப்பீட்டு விலைகளையும் ஒப்பிடுகையில் 65 சதவீதத்திற்கும் 77 சதவீதத்திற்கும் இடையே பாரிய வேறுபாடு அவதானிக்கப்பட்டமையால் கிரய மதிப்பீட்டைத் தயாரிக்கையில் அதிகூடிய விலை வீதங்களைப் பயன்படுத்தி கிரய மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தமை வெளிப் பட்டதுடன் இது கணக்காய்வில் சச்ரவுத் தன்மைக்குரியதாக காணப்பட்டது. | நடைமுறைச் சாத்தி யமாக மதிப்பீடு தயாரிக்கப்படுதல் வேண்டும். | பதிலளிக்கப்பட்டிருக் கவில்லை. |
| (ii) | **1116** கூண்டில்களை தயாரிப்பதற்கு தேவையான **1** ½ " அளவுடைய **11160** PVC குளாய்களை கொள்வ னவு செய்வதற்காக கொள்வனவுச் சபை அங்கீகரித்தி ருக்கையில், **13392** குளாய்களை கொள்வனவு செய்வதற்காக கூறுவிலைகள் கோரப்பட்டிருந்தன. அதற்கமைய **2232** PVC குளாய்களை மேலதிகமாக கொள்வனவு செய்வதற்காக ரூபா **868,248** செலுத்தப்பட்டிருந்தது. | கொள்வனவுச் சபை யின் அங்கீகாரத்தின் பிரகாரம் கேள்வி கோரல் மேற்கொள் ளப்படுதல் வேண்டு ம். | பதிலளிக்கப்பட்டிருக் கவில்லை. |
| (iii) | கடலட்டை பிடித்தல் கூண்டில் களை தயாரிப்பதற்குத் தேவை யான கொள்வனவுகளிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த 4 கூறுவி லைகளில் 3 கூறுவிகைளிலுள்ள | கொள்வனவு வழிகா ட்டல்கள் கையேட்டி லுள்ள ஏற்பாடுக ளைப் பின்பற்றி அர சாங்கத்திற்கு மிக | பதிலளிக்கப்பட்டிருக் கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | அனைத்து விடயங்களிற்கும் விலைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்காமையால் அவை நிராகரிக்கப்பட்டு மீண்டும் கூறு விலைகள் கோரப்பட்டு அதற்கமைய அனைத்து விடயங்களிற்கும் விலைகளை சமர்ப்பத்திருந்த மனுதாரர் தெரிவு செய்யப்பட்டிருந்தார். இருப்பினும், மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதலாக விலைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தமையால் கொள்வனவு வழிகாட்டல்கள் கையேட்டின் **7.12.2 (அ), 7.12.2 (ஆ)** மற்றும் **7.12.3 (அ)** வழிகாட்டல்களின் படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அனுகூலமான விதத்தில் தீர்மானம் எடுக்கப்படுதல் வேண்டும். | |
| (iv) | மட்டக்களப்பு மாவட்ட கடற்றொழில் அலுவலகத்திற்கு கடலட்டை பிடித்தல் கூண்டில்களைத் தயாரிப்பதற்கான பொருட்கள் மற்றும் உபகரணங்களைக் கோரியிருந்த 06 பயனாளிகளால் ஒவ்வொருவரினாலும் கோரப்பட்டிருந்த 06 கூண்டில்களிற்கான பொருட்கள் கையேற்கப்பட்டிருக்காமையால் 36 கூண்டில்களிற்கா கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா **700,884** பெறுமதியான பொருட்கள் பயனற்ற செலவினமாகியிருந்தது. | உரிய மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டு பயனாளிகள் தெரிவு செய்யப்படுதல் வேண்டும். | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (v) | தேசிய நீரியல் தாவரங்கள் அபிவிருத்தி அதிகாரசபையால் 3 கடற்றொழில் மாவட்டங்களிலுள்ள பயனாளிகளிற்கு வழங்கப்பட்டிருந்த கடலட்டை பிடித்தல் கூண்டில்கள் சிறயதாகக் காணப்பட்டமையால் 80 சதவீதமான அட்டைகள் கூண்டில்களிலிருந்து வெளியேறியிருந்தமை, 5 இற்கும் 10 இற்கும் இடைப்பட்ட அளவில் குஞ்சுகள் இறந்திருந்தமை, பைகளிலிருந்து அகற்றிய பின்னர் அதிளவானவை இறந்திருந்தமை, அளவுத்திட்டங்களின் படி குஞ்சுகள் 2.5 அங்குலமாக காணப்பட வேண்டிய போதிலும், வழங்கயிருந்த குஞ்சுகள் 2 செ.மீ. ஆகக் காணப்பட்டமை போன்ற காரணங்களால் குறைபாடுகள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. மேலும், வழங்கப்பட வேண்டிய **186,000** குஞ்சுகளில் **46,500** குஞ்சுகள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தமையால் உரியளவில் குஞ்சு | எதிர்பார்த்த இலக்கை அடைவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | களை வழங்குவதற்கு தவறியிருந்தது. அதற்கமைய ஏறத்தாழ ரூபா 25 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்த பின்னரும் எதிர் பார்த்த இலக்கை அடைவதற்கு முடியாது போயிருந்ததுடன் இது தொடர்பில் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் இனங்காணப்பட்டிருக்கவுமில்லை. | | |
| (vi) | கடலட்டை விளைச்சல் தொடர் பான அறிக்கைகள் குறித்த மாவட்ட அலுவலகங்களிலிருந்து கிடைக்கா மையால் கடலட்டை விளைச்சல் தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடிந்திருக்கவில்லை. | எதிர்பார்த்த இலக்குகள் அடையப்பட்டமையை உறுதிப்படுத்துவதற்காக பின் தொடர் நடவடிக்கை மேற் கொள்ளப்படுதல் வேண்டும். | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. |

**(இ)** களப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் களப்பு எல்லை நிர்ணயித்தல் செயற்திட்டத்தின் மூலம் 10 களப்புகளின் எல்லைகளை நிர்ணயிப்பதற்காக 2018 ஆம் ஆண்டில் **19,888** எல்லை நிர்ணய கற்களை ரூபா **31.9** மில்லியன் செலவில் கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், **14,748** கற்கள் மாத்திரமே வழங்கப்பட்டு அதற்காக ரூபா **21,339,345** செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| (i) | இந்தக் கொள்வனவின் போது தேசிய கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையின் **3.1, 4.3** மற்றும் **8.9.1** வழிகாட்டல்களின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தேசிய கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையின் வழிகாட்டல்கள் பின்பற்றப்படுதல் வேண்டும். | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 10 களப்புகளிற்காக வழங்கப்பட வேண்டிய **19,888** எல்லை நிர்ணயக் கற்களில் 02 களப்புகளிற்கான **1,705** நிர்ணயக் கற்கள் முழுமையாகவே வழங்கப்படாதிருந்ததுடன் 06 களப்புகளிற்காக வழங்கப்படாதிருந்த நிர்ணயக் கற்களின் பெறுமதி ரூபா **9,141,748** ஆகும். | ஒப்பந்தகாரர் உரியபடி வழங்களை செய்யாதிருப்பின் செயலாற்றல் பிணை முறியை திணைக்களத்திற்கு கையேற்றல் வேண்டும். | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (iii) | அங்கீகாரமின்றி மேலதிகமாக **2,276** எல்லைக் கற்கள் புத்தளம் களப்புக்காக கொள்வனவு செய்ய ப்பட்டிருந்ததுடன், இதற்காக ரூபா **3,826,638** செலவிடப்பட்டிருந்தது. | பணம் செலுத்துவத ற்கு முன்னர் வேலைக்கு அங்கீகா ரம் கிடைத்துள்ளதா என்பது குறித்தும் திட்டத்துடன் இணங் குகின்றதா எனவும் பரிசோதித்து கொடுப் பனவு செய்தல் வேண்டும். | பதிலளிக்கப்பட்டிருக் கவில்லை. |
| (iv) | களப்பு எல்லை நிர்ணய பணிக்காக 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 25 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், ரூபா 14 மில்லியன் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தமை யால் 11 மில்லியன் நிதி பயனற்றுப் போயிருந்தமை அவதானிக்கப்பட் டது. கற்கள் வழங்கப்பட வேண்டிய இடங்களிற்கு கற்கள் வழங்கப்படா மை, நியமத்திற்கு அமைய கற்கள் வழங்கப்பட்டிருக்காமை மற்றும் எல்லைக் கற்களை பதித்தல் ஒப்பந்தத்தின் பெறுகை நடவடிக் கைகள் தாமதமடைந்திருந்தமை போன்ற காரணங்களால் 2019 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் களப்பு எல்லை நிர்ணயித்தல் பணிகள் தாமதமடைந்திருந்தன. | எதிர்பார்த்த இலக்கு களை அடைவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பதிலளிக்கப்பட்டிருக் கவில்லை. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடுதல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 இன் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி திணைக்களத்தின் ஒவ்வொரு செயற்திட்டத்தி ற்கும் உரித்தான நிதிச் செயல் முன்னேற்றம் மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அச்செயற் திட்டங்க ளிற்குரிய பௌதீக செயல் முன்னேற்றத்தை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய **2014/01** ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் செயலாற்றல் தொடர்பான அறிக்கைகள் சரியாகத் தயாரிக்கப்படுதல் வேண் டும். | பதிலளித்திரு க்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) 2019 இன் செயல் நடவடிக்கைத் திட்டத்திலுள்ள கட்டிடமொன்றை நிர்மாணித்தலின் கீழ் 2019 ஆம் ஆண்டிற்காக ரூபா **38.7** மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், 2018 இல் ஆரம்பிக்கப்பட்ட VMS கட்டிடத்தின் எஞ்சிய வேலைகளிற்காகவும் விலைப் பட்டியல்களை தீர்ப்பதற்காகவும் அந்த நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன்படி திட்டம் நடைமுறைச் சாத்தியமானதாக தயாரிக்கப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் ஆண்டின் செயற்பாடகளிற்க அமைய நடைமுறைச் சாத்தியமாக தயாரிக்கப்படுதல் வேண்டும். | பதிலளித்திருக்கவில்லை. |

## 3.2 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) யாழ்ப்பாணம் தலையடி தங்குமிட புனரமைத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அதற்கான நிதி ஏற்பாட்டிலிருந்து எவ்வித செலவும் செய்யப்பட்டிருக்கவில்லை. புனரமைத்தல் நடவடிக்கைகள் அனைத்தையும் 2019 நவம்பர் மாதமளவில் பூரணப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2019 திசெம்பர் 31 வரையிலும் பூரணப்படுத்தப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. | புனரமைத்தல் மேற்கொள்ள வேண்டிய தேவைப்பாடு செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளமையால் அந்த பணியினை தாமதமின்றி நிறைவேற்றுதல் வேண்டும். | பதிலளித்திருக்கவில்லை. |
| (ஆ) கடற்றொழில் மற்றும் நீரியல் வளத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகங்களினதும் தலைமை அலுவலகத்தினதும் பணிகளை தொடர்புறுத்துவதற்காக ரூபா 5.4 மில்லியன் பெறுமதியான மென்பாக முறைமைகளை அறிமுகப்படுத்தும் செயற்திட்டம் 2018 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், 2019 ஆம் ஆண்டில் பூரணப்படுத்தப்பட வேண்டியிருந்தது. அதற்காக ரூபா 23.09 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும், 2019 ஆம் ஆண்டின் இறுதியளவில் அப்பணி முடிவடையாதிருந்ததுடன் அதுவரை ரூபா 13.7 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. | தேவையான பணிகளை ஒப்பந்த காலத்தில் வினைத்திறனாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பதிலளித்திருக்கவில்லை. |

### 3.3 தேசங்கள் மற்றும் இழப்புக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 நவம்பர் முதல் 2019 திசெம்பர் வரையான காலத்தில் கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சின் கட்டிடத்தில் 6 ஆவது மாடியில் அமைந்துள்ள திணைக்க ளத்திற்கு மழை நீர் கசிவுற்றிருந்தமையால் அலுவலக உபகரணங் களிற்கு ரூபா **13,666,960** மதிப்பீட்டுப் பெறுமதி யுடைய சேதம் ஏற்பட்டிருந்த போதிலும், அது தொடர்பில் பொறுப்புடைய உத்தியோகத்தர் களைக் கண்டறிவதற்கு பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், நிதிப் பிரமாணம் **103 (1) (உ)** பிரகாரம் அது இழப்புக்கள் மற்றும் சேதங்கள் பதிவேட்டில் பதியப்பட்டிருக்காமையும் அவதானிக்கப்பட்டது. | நிதிப்பிரமாணம் **103 (1) (உ)** பிரகாரம் அந்த இழப்பானது இழப்புக்கள் மற்றும் சேதங்கள் பதிவேட்டில் பதியப்படுதல் வேண் டும். | பதிலளித்திருக்கவில்லை. |

### 3.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| **(அ)** | ஆழ் கடலில் கடற்றொழிலில் ஈடுபடுகின்ற பல்நாள் படகுகளிலுள்ள வசதிகளை மேம்படுத்துவதற்காக தேவையான உபகரணங்கள் / பொருட் தொகுதிகளை வழங்குவதற்கு மானிய முறையொன்று அல்லது அதனை நடைமுறைப்படுத்துவதற்கான திட்ட மொன்றை பரிந்துரைத்தல் அல்லது அமைச்சரவையின் அங்கீகார மேனும் இன்றி 2019 ஆம் ஆண்டில் மீனவர்களிற்கு மானிய முறையின் கீழ் 37 வலைத் தொகுதிகளையும் 21 உபகரணங்களையும் வழங்குவதற்காக திணைக்களத்தினால் ரூபா **50,536,520** செலுத்தப்பட்டிருந்தது. | சரியான முறையில் அமைச்சரவை விஞ் ஞாபனம் சமர்ப்பிக்கப் பட்டு அமைச்சரவை யின் அங்கீகாரம் பெற ப்படுதல் வேண் டும். | பதிலளித்திருக்கவில்லை. |
| **(ஆ)** | மீன்பிடி உபகரணங்களை வழங்குவத ற்காக பொருத்தமான பயனாளிகளை தெரிவுசெய்யும் நோக்கில் குழுவொ ன்றை நியமிப்பதற்கு பணிப்பாளர் (கைத்தொழில்) இனால் உத்தியோக த்தர்கள் பெயரிடப்பட்டிருந்த போதி லும், குழுவினால் பயனாளிகள் தெரி வு செய்யப்பட்டிருந்தமையை உறுதிப்ப டுத்தும் சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பக்கப்பட்டிருக்கவில்லை. | பயனாளிகள் முறை யான விதத்தில் தெரிவு செய்யப்படு தல் வேண்டும். | பதிலளித்திருக்கவில்லை. |